**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

| | | |
|---|---|---|
| **Case No** | : | **CC No.305/2025** |
| **Prosecution Witness** | : | **LW 3 / PW 3** |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : Sumathi | | | : |
| Husband Name | : Sathish Kumar | | | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(Both accused Present )**

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **17/06/2026**

**<u>முதல் விசாரணை ( அரசு தரப்பு )</u>**

நான் தற்பொழுது வில்லிவாக்கத்தில் வசித்து வீட்டிலிருந்து வருகிறேன். அ.சா.1 எனது தந்தை மற்றும் அ.சா.2 எனது தங்கை ஆவார். கடந்த 28.08.2025 அன்று எங்களுடைய பூர்விகம் இடமான மேட்டுபாளையம் ஜோதி நகரில் உள்ள எங்களுடைய நிலத்தை அளப்பதற்காக சென்றிருந்தோம். நிலம் அளக்கப்பட்டு எங்களுடைய நிலத்தில் மூன்றரை அடி ஆஜர் எதிரிகள் தள்ளி வந்ததாக கூறினார் survivor போன பின்பு மாலை 05.30 மணிக்கு எல்லை கல் வைக்க சென்ற போது சின்னராசு எனது அப்பாவை கைமுட்டியால் தள்ளினார் எனது அப்பா கீழே விழுந்தார். மேலும் நானும் எனது தங்கையும் அவரை தடுக்க சென்ற போது ராஜேஷ்வரி அடிக்க ஆரம்பித்தார். மேலும் சின்ராசு கையில் வைத்திருந்த கத்தியால் கழுத்தில் தாக்க வந்தார். எனது தங்கை கீழே குனிந்து போது அவளது தலையில் காயம் ஏற்பட்டது. கத்தியை பிடுங்க முற்பட்ட கிரி என்பவரின் கையிலும் காயம் ஏற்பட்டது. பின்னர் அந்த இடத்திலிருந்து சின்ராசு சென்றுவிட்டார். அந்த கத்தியை கிரி என்பவர் எங்களிடம் கொடுத்தார். அதை முறைய காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். அதன் பேரில் எனது தங்கையை மாலை 06.00 மணியளவில் என்னை பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இரண்டு நாட்கள் சிகிச்சை பெற்றாள். பின்னர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

நான் அளித்த வாக்குமூலத்தில் நான் தான் எனது தங்கை மருத்துவமனையில் அனுமதித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடன் அங்கிருந்த நபர்களும் உடன் வந்தனர். நான் அளித்த வாக்குமூலத்தில் மற்றவர்களுடன் கிரி என்பவர்களின் விவரம் இல்லை என்றால் சரிதான். புகார் அளிக்க என் தந்தையுடன் நான் செல்லவில்லை. சம்பவம் நடந்த அன்றே போலீசார் என்னை விசாரித்தார்கள். மேலும் மூன்று நாட்கள் கழித்து மீண்டும் என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை சம்பவத்தின் அன்றும் மூன்று நாட்கள் கழித்தும் எந்த ஒரு விசாரணையும் செய்யவில்லை. எனது தந்தைக்கும் தங்கைக்கும் சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதை நான் மறுக்கிறேன்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

**Case No : CC No.305/2025**
**Prosecution Witness : LW 2 / PW 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : Adhilakshmi | | : |
| Husband Name | : Ivin | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Both accused Present )**

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **17/06/2026**

**<u>முதல் விசாரணை ( அரசு தரப்பு )</u>**

நான் தற்பொழுது வில்லிவாக்கத்தில் வசித்து தனியாக தொழில் செய்து வருகிறேன். கடந்த 28.08.2025 அன்று எங்களுடைய பூர்விகம் இடமான மேட்டுபாளையம் ஜோதி நகரில் உள்ள எங்களுடைய நிலத்தை அளப்பதற்காக சென்றிருந்தோம். நிலம் அளக்கப்பட்டு மாலை 05.30 மணிக்கு எல்லை கல் வைக்க சென்ற போது சின்னராசு எனது அப்பாவை தள்ளினார் மேலும் நான் அவரை தடுக்க சென்ற போது அவர் கையில் வைத்திருந்த கத்தியால் எனது கழுத்தில் தாக்க வந்தார். நான் கீழே குனிந்து போது எனது தலையில் காயம் ஏற்பட்டது. அதன் பேரில் என்னை மாலை 06.00 மணியளவில் என்னை பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இரண்டு நாட்கள் சிகிச்சை பெற்றேன். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள கத்தியால் தான் என்னை தாக்கினார். போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரியான சின்ராசு தான் என்னை தாக்கினார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

மருத்துவமனையில் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் போலீசார் பெற்ற வாக்குமூலத்தில் மருத்துவமனைக்கு வந்து விசாரித்ததாக விவரம்

இல்லை என்றால் சரிதான். எனது தந்தை தான் தவறுதலாக நிலம் அலந்தார் என்றும் அதன் பேரில் எதிரிகளை அடிக்க முற்பட்ட போது நான் தடுத்ததில் எனது அப்பா தள்ளிவிட்டு ஏற்பட்ட காயத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் மறுக்கிறேன். போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் கத்தியை அடையாளம் காட்டினேன் மேலும் சம்பவத்தில் பயன்படுத்தியதாக சொல்லப்படும் கத்தி அது இல்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். எனது அப்பா அளித்திருந்த பொய்யான புகாரின் பேரில் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் மறுக்கிறேன்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

**Case No : CC No.305/2025**
**Prosecution Witness : LW 1 / PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஏழுமலை | | : |
| Father / Husband Name | : செல்லன் | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Both accused Present )**

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **17/06/2026**

**முதல் விசாரணை ( அரசு தரப்பு )**

நான் தற்பொழுது வில்லிவாக்கத்தில் வசித்து இரயில்வேயில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 28.08.2025 அன்று எங்களுடைய நிலத்தையும் அருகில் உள்ள சின்னராசு ராஜேஷ்வரி என்பவருடைய நிலத்தையும் அளக்க survivor வந்தார். ஆஜர் எதிரியிடம் survivor என்னுடைய நிலத்தில் மூன்றரை அடி தள்ளி வந்ததாக அவர்களிடம் கூறினார். survivor போகும் வரை அமைதியாக இருந்துவிட்டு மாலை 05.30 மணிக்கு எல்லை கல் வைக்க சென்ற போது சின்னராசு என்னை தள்ளினார் அதில் நான் கீழே விழுந்துவிட்டேன். என் மகள்கள் என்னுடன் இருந்தனர். ஆதிலக்ஷ்மி என்னை தூக்கினார். என் மகள்கள் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு கையில் வைத்திருந்த சிறிய கத்தியால் என் மகள் ஆதிலக்ஷ்மி தலையில் அறுத்துவிட்டார். அவளை நாங்கள் பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். இரண்டு நாட்கள் சிகிச்சை பெற்றாள். பின்னர் மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு அனுமதிக்கபட்டார். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள கத்தியால் தான் என் மகளை வெட்டினார்கள். அந்த கத்தி **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் அளித்த புகார் **அ.த.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரியான சின்ராசு தான் எனது மகளை தாக்கினார்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் உள்ள விவரம் எனக்கு நன்கு தெரியும். நான் அளித்த புகாரில் கத்தியை பற்றிய விவரம் இல்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். புகாரில் கூர்மையான ஆயுதன் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் தயார் செய்து வைத்திருந்த கத்தியை அரசு தரப்பினர் கேட்டுக்கொண்டதன் பேரில் அடையாளம் காட்டினேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். புகாரில் குறிப்பிட்டுள்ள கூர்மையான ஆயுதன் அது இல்லை என்று சொன்னால் அதை நான் மறுக்கிறேன். மேற் சொன்ன மூன்றரை அடி நில தகராறை பற்றிய விவரங்கள் எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். முறையே ஐக்பந்தி விவரத்திலுள்ள ஆட்களை விசாரிக்கவில்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். ஆஜர் எதிரிகள் நான் செய்த தவறை முறையே கேட்டதால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அதை நான் மறுக்கிறேன்.

நான் கோபத்தில் எதிரியை அடிக்க முற்பட்ட போது எனது மகள் தடுத்ததால் அவர் கீழே விழுந்து ஏற்பட்ட காயம் என்றால் அதை நான் மறுக்கிறேன். எதிரிகள் என்னை தாக்கவில்லை எந்த முறையற்ற வார்த்தைகளும் பயன்படுத்தவில்லை என்றால் மறுக்கிறேன். எதிரிகளின் நிலத்தை அபகரிக்கும் நோக்குடன் தாக்கல் செய்த வழக்கு என்றால் மறுக்கிறேன்.